## O.S. No.18/2023

**08.07.2026**

**வா.சா.1**

**திருமதி வசுந்தரா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்) (காணொலி மூலமாக)**

ஏற்கனவே 06.11.2024 அன்று என்னை குறுக்கு விசாரணை செய்தீர்கள் என்றால் சரி. அந்த குறுக்கு விசாரணையின்போது B பட்டியல் சொத்தை குமாருக்கு விற்ற கிரய சாசன நகல் என் மூலமாக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரி. அதன் பிறகுதான் குமாரை OS 18/2023 ல் 2ம் பிரதிவாதியாக சேர்த்தேன் என்றால் சரி. இந்த வழக்கை தாக்கல் செய்தது 2023ம் ஆண்டு என்றால் சரி. குமாருக்கு B பட்டியல் சொத்தை விற்றது 30.09.2024 என்றால் சரி. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போதே பி.சா.ஆ.1யை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரி. அவ்வாறு சொத்தை விற்பனை செய்வதற்கு நீதிமன்றத்தில் அனுமதி பெறவில்லை என்றால் சரி. நீதமன்ற அனுமதி இல்லாமல் சொத்தை விற்பனை செய்வதற்கு எனக்கு அனுமதி இல்லையென்றால்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.07.08 15:41:55 +0530

தவறு. வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் பிரதிவாதியின் உரிமைகளை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவும் நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்திலும் தாவா B பட்டியல் சொத்தை குமாருக்கு நான் விற்பனை செய்தது செல்லாது என்றால் தவறு. சாட்சி தானாக மேற்படி சொத்தை விற்பதற்கு எனக்கு உரிமையுள்ளது. அந்த காலகட்டத்தில் எனக்கு விபத்து ஏற்பட்டதால் நான் சொத்தை விற்பனை செய்தேன். மேற்படி விபரத்தை நீங்கள் என்னை குறுக்கு விசாரணை செய்வதற்கு முன்பே நான் நீதிமன்றத்தில் தெரிவித்திருக்க வேண்டும் என்றும் குறுக்கு விசாரணையில் உண்மை வெளிவந்ததால் அந்த சங்கதி ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் தவறு.

**குறுக்கு விசாரணை (2 ம் பிரதிவாதி தரப்பில்)**

2ம் பிரதிவாதி என்னிடம் B பட்டியல் சொத்தை கிரயம் பெறும்போது ஆவணங்கள் அனைத்தும் என் பெயரில்தான் இருந்தது என்றால் சரி. 2ம் பிரதிவாதி B பட்டியல் சொத்தை மூல ஆவணங்கள் மற்றும் வில்லங்க சான்றினை பார்த்துதான் கிரயம் பெற்றார் என்றால் சரி. அவ்வாறு வில்லங்க சான்றினை பார்வையிடும்போது நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததற்கான எந்தவித குறிப்புகளும் இல்லை

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.07.08 15:42:00 +0530

என்றால் சரி. அதனால்தான் 2ம் பிரதிவாதி என்னிடம் நல்லெண்ணத்தின் அடிப்படையில் சரியான பிரதி பிரயோஜனத்திற்கு கிரயம் பெற்றார் என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.07.08 15:42:05 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.